தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### "குருத்துப் பூச்சி ஒழிப்புக்கு தேவை அவசர நடவடிக்கை'



நெல் பயிரைத் தாக்கும் குருத்துப் பூச்சியை ஒழிக்க அவசர நடவடிக்கை எடுத்தால் மட்டுமே விவசாயிகள் நஷ்டத்தில் இருந்து மீள முடியும் என திரூர் நெல் ஆராய்ச்சி நிலையத்தினர் தெரிவித்தனர். இப்பருவத்தில் நெல் பயிரில் குருத்துப் பூச்சித் தாக்குதல் அதிகம் இருக்கும் எனவும், அதில் இருந்து விவசாயிகள் தங்களது பயிர்களைப் பாதுகாத்து நஷ்டமடையாமல் இருக்கவும் உதவிப் பேராசிரியர் சுமதி யோசனைகள் வழங்கியுள்ளார். இதுகுறித்து அவர் கூறியது: தற்போதுள்ள பருவத்தில், நெல் பயிரில் பரவலாக குருத்துப் பூச்சியின் தாக்குதல் இருக்கும். இத் தாக்குதலால் விவசாயிகளுக்கு கடும் பாதிப்பு ஏற்படும். இந்த பூச்சித் தாக்குதலின் போது புழுக்கள் இளம் பயிரின் தண்டில் துளையிட்டு உள்ளே சென்று அடிபாகத்தில் இருந்து உள்பகுதியை கடித்து உண்பதால் இளம் பயிரின் நடுக் குருத்து வாடி காய்ந்து விடும். பூக்கும் பருவத்தில் கதிர் காய்ந்து மணி பிடிக்காமல் வெண்ணிறக் கதிர்களாக மாறும். வாடியக் குருத்து அல்லது வெண் கதிரைப் பிடித்து இழுத்தால் பயிர் எளிதில் கையில் வந்து விடும். ஒரு சதுர மீட்டருக்கு 2 மூட்டை நெல் வரும். அதில் 12 சதவீதம் நஷ்டம் ஏற்படும். குருத்துப் பூச்சியை ஒழிக்க

மேலாண்மை முறைகள்: அறுவடை செய்த பின் தாள்களை மடக்கி உழுவதன் மூலம் புழுக்களையும், கூட்டுப் புழுக்களையும் அழிக்கலாம்.

நடவு நடுவதற்கு முன் நாற்றுக்களின் நுனியைக் கிள்ளி முட்டைக் குவியல்களை அழிக்க வேண்டும். மண் பரிசோதனைப் படி தழைச் சத்து உரத்தை இட வேண்டும். மாலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை விளக்குப் பொறி அமைக்க வேண்டும். பூச்சித் தாக்குதலையும் மீறி வளரக் கூடிய டிகேஎம் 6, ஐ.ஆர்.8, 20, 26, 36, 40 ஆகிய நெல் ரகங்களைப் பயிரிடலாம். ஒரு ஹெக்டேருக்கு 12 இனக் கவர்ச்சிப் பொறியும், ஒரு ஹெக்டேருக்கு 5 என்ற அளவில் டிரைகோகிரம்மா ஜப்பானிக்கம் என்ற முட்டை ஒட்டுண்ணியை அமைக்கலாம். பூச்சித் தாக்குதலில் பொருளாதார சேத நிலை அடையும்போது: ஒரு ஹெக்டேருக்கு புரபனோபாஸ் 1000 மில்லி லிட்டரும், பாஸ்போமிடான் 1250 மில்லி லிட்டரும், புளுபென்டிமைட் 50 மில்லி லிட்டரும், கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 15 கிலோ ஆகியவற்றை இடவேண்டும்.

நெல் ஆராய்ச்சி மையத்தின் மேற்கண்ட நடைமுறைகளை உரிய முறையில் மேற்கொண்டால் நஷ்டத்தில் இருந்து மீண்டு வரலாம் என நெல் ஆராய்ச்சி நிலையத் தலைவர் பேராசிரியர் அகிலாவின் அறிவுரைகளை விவசாயிகள் பின்பற்ற வேண்டும் என உதவிப் பேராசிரியர் சுமதி கேட்டுக் கொண்டார்.

# <u>மாற்றம் தரும் மாற்று நெல் சாகுபடி முறை!</u>



தமிழக வேளாண்மையில் நெல் சாகுபடி ஒரு முக்கிய அங்கமாகும். கடந்த சில ஆண்டுகளாக மொத்த ஆண்டு நெல் உற்பத்தியில் ஒரு தேக்க நிலை இருந்து வருகிறது. மக்கள் தொகை தொடர்ந்து பெருகி வருவதால், நெல் உற்பத்தித் திறனை மேலும் அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். நெல் சாகுபடியில் மற்றொரு கவலைக்குரிய நிலை சாகுபடிக்குத் தேவையான நீரின் அளவு குறைந்து பற்றாக்குறை இருப்பதுதான். ஆகையால் நெல் சாகுபடியில் தற்போதைய தேவை, குறைந்த நீரில் அதிக உற்பத்தித் திறன் கொடுக்கக் கூடிய தொழில்நுட்பம். இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதுதான் திருந்திய நெல் சாகுபடி முறை. திருந்திய நெல் சாகுபடி குறித்து காஞ்சிபுரம் மாவட்டம், காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் (உழவியல்) பெ. முருகன் கூறியது: திருந்திய நெல் சாகுபடி என்பது சிக்கன நீர்ப் பாசனத்தில் இளநாற்றை அதிக இடைவெளியில் சதுர முறையில் நடவு செய்து களைக் கருவி உபயோகித்து விளைச்சலை அதிகரிக்கும் மாற்று நெல் பயிர் சாகுபடி முறையாகும். இந்த தொழில்நுட்பம், நடைமுறை சாகுபடி சிபாரிசுகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். இந்த சாகுபடி முறையால் மகசூல் அதிகரிப்பது மட்டுமல்லாமல் வேறு பல நன்மைகளும் விவசாயிகளுக்கு கிடைக்கிறது.

**சாகுபடியின் முக்கிய அம்சங்கள்:** 14 நாள்கள் வயதுடைய வாளிப்பான நாற்றுகளை நட வேண்டும், ஒரு குத்துக்கு ஒரு நாற்றை சதுர முறையில் நடவேண்டும். அதிக இடைவெளி விட்டு சதுர நடவு (25-க்கு 25 செ.மீ.) ரோட்டரி கோனோ வீடர் மூலம் களைகளை அமுக்கி சேற்றைக் கலக்குதல் வேண்டும். நீர் மறைய நீர் கட்டி பாசன நீரின் அளவை குறைத்தல் பச்சை வண்ண இலை நிற அட்டை மூலம் தழைச் சத்தை நிர்வகித்தல் அவசியமாகும்.

**நாற்றங்கால் தயாரிப்பு:** நடவு வயலின் ஓரத்தில் 1-க்கு 5 மீ. அளவுள்ள எட்டு மேடைகளை தகுந்த இடைவெளியில் உருவாக்க வேண்டும். மேடைகளை தகுந்த இடைவெளியில் உருவாக்கும்போது இடையே இருக்கும் மண்ணை வெட்டி எடுத்து மேடையை அமைக்க வேண்டும். நிலப்பரப்புக்கு 5.செ.மீ. உயரம் மேடை அமைந்தப் பின் மேடை மேல் பாலிதீன் தாளையோ அல்லது பிரித்த உரச் சாக்குகளையோ பரப்பி விட வேண்டும். பிறகு நாற்று மேடை ஒன்றுக்கு 95 கிராம் வீதம் 8 நாற்று மேடைகளுக்குத் தேவையான 760 கிராம் டி.ஏ.பி. உரத்தை நன்கு பொடி செய்து மண்ணுடன் கலந்து நாற்று மேடைகளில் 4 செ.மீ. உயரத்துக்கு நிரப்பி விட வேண்டும்.பின் மூங்கில் குச்சிகளை மேடை ஓரங்களில் படுக்கையில் ஊன்றிவிட்டால் மண் மேடை ஓரங்களிலிருந்து கரைந்து விடாமல் இருக்கும். முளை கட்டிய விதையை (ஒவ்வொரு 5.ச.மீ. மேடைக்கு 375 கிராம் விதை பரவலாக விதைக்க வேண்டும். நாற்று மேடையை காய்ந்த மண் கொண்டு தயாரித்தால் விதைத்தப் பின், விதைகள் மூடியிருக்குமாறு 1.செ.மீ. உயரத்துக்கு மண்ணை தூவி விடலாம். பூவாளி கொண்டு நீர் தெளிக்கலாம் அல்லது சுற்றியிருக்கும் பள்ளங்களில் நீர் நிரப்பலாம். பிறகு நாற்றங்காலை வழக்கமான முறையில் பராமரிக்க வேண்டும். நடவு வயல் மற்றும் நாற்று நடவு: நடவு வயல் தயாரிப்பில் திருந்திய நெல் சாகுபடிக்கான மாற்றங்கள் ஏதும் இல்லை. நடவுக்கு 10 நாள்களுக்கு முன்பாக நடவு வயலில் ஏக்கருக்கு 5 டன் நன்கு மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ்டு உரத்தை சீராகப்

பரப்பி நீர்ப் பாய்ச்சி சேறு உழவு செய்ய வேண்டும். பதினைந்து நாள்கள் வயதுடைய நாற்றுகளை நடவுக்கு உபயோகிக்க வேண்டும். நாற்றுகளை பத்தைகளிலிருந்து பிரித்து எடுத்து 25-க்கு 25 செ.மீ. இடைவெளியில் ஒவ்வொரு நாற்றாக சதுர நடவாக நட வேண்டும். வேர்கள் மேல் நோக்கி இல்லாமல் 3 செ.மீ. ஆழத்துக்கு மிகாமல் மேலாக நடவு செய்ய வேண்டும். இவ்வாறு நடவு செய்வதற்கு நடவுக் கயிற்றில் 25 செ.மீ. இடைவெளியில் அடையாளத்துக்கு கலர் துண்டு துணிகளைக் கட்டி, நடவுக் கயிற்றை 25 செ.மீ. என்ற அளவில் மாற்றி மாற்றி போட்டு நடவு செய்யும்போது 25-க்கு 25 செ.மீ. என்ற அளவில் இடைவெளி அமையும். களைக்கருவி உபயோகிப்பது அவசியமாதலால் வரிசை சதுர நடவு முக்கியமானதாகும்.

**நீர் மேலாண்மை:** 2-க்கு 2.5 செ.மீ. உயரம் நீர் கட்டி, பின் மண்ணின் மேல் பரப்பில் லேசான கீரல் வெடிப்புகள் தோன்றியபின் மறுபடியும் 2-க்கு 2.5 செ.மீ. நீர் கட்ட வேண்டும். இந்த முறையை பஞ்சு கட்டும் பருவம் வரை மட்டும் செய்ய வேண்டும். அதன் பின், அறுவடைக்கு முன்பு வரை, 2-க்கு 2.5 செ.மீ. நீர் கட்டி மண்ணின் மேற்பரப்பில் நீர் மறைந்தபின் மண்ணைக் காய விடாமல் மறுபடியும் அதே அளவு நீர் கட்ட வேண்டும்.

**களை நிர்வாகம்:** திருந்திய நெல் சாகுபடியில், களைகளை அவைகளின் இளம் பருவத்திலேயே மண்ணிலேயே அழுத்தி விடப்படுவதால், களைகளால் எடுக்கப்படும் சத்துக்களின் அளவு குறைந்து, நெற்பயிருக்கு சத்துக்கள் அதிக அளவில் கிடைக்க வாய்ப்பு உள்ளது. மேலும் சத்துகள் அனைத்தும் அந்த மண்ணிலேயே சேர்க்கப்படுகின்றன. உருளும் களைக்கருவி (ரோட்டரி வீடர்) கொண்டு நட்ட 15, 25, 35 நாள்களில் செடிகளுக்கு ஊடே குறுக்கும் நெடுக்குமாக உபயோகித்தல் வேண்டும். சீரான அளவு நீர் இருக்கும்போது களைக் கருவியை உபயோகிக்க இலகுவாக இருக்கும். ஊட்டச்சத்து மேலாண்மை: நெல்லைப்

பொருத்தவரை தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து, துத்தநாகம் ஆகியவை முக்கிய ஊட்டச்சத்துக்கள் ஆகும்.

**திருந்திய நெல் சாகுபடியில் தழைச்சத்து மேலாண்மை** மாற்றியமைக்கப்பட்டு பயிருக்குத் தேவையாக இருந்தால் மட்டுமே மேலுரமாக தழைச்சத்தை அளிக்கும் இந்த தொழில்நுட்பம் இலை நிற அட்டையை உபயோகப்படுத்தி செய்யப்படும். நெற்கதிர் எண்ணிக்கை மற்றும் மகசூல்: ஒரு குத்தில் அதிகபட்ச அளவு மொத்த தூர்கள் (40-க்கு 45) உண்டாக வாய்ப்புண்டு. ஒவ்வொரு கதிரிலும் மணிகள் அதிக எண்ணிக்கையில் இருக்கும். சரியான ஊட்டச்சத்து நிர்வாகத்தினால் ஏக்கருக்கு 4.0-க்கு 4.5 டன் வரை மகசூல் கிடைக்கின்றன. **விவசாயிகள் பெறும் பலன்கள்**: குறைந்த விதையளவு, நாற்று பறிக்கும் செலவு குறைவு, களைக்கொல்லி தேவையற்றது, உருளும் களைக்கருவி உபயோகிப்பதால் கூட்டுப் பயன்கள், 50 சதவீதம் வரை நீர் சேமிப்பு, கதிர்கள், தானியங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, நெல், வைக்கோல் விளைச்சல் அதிகரிப்பு, அதிக வருமானம் கிடைக்கும். மேலும் விவரங்களுக்கு காஞ்சிபுரம் மாவட்டம், காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலையத்தை 044-2745 2371 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**திருந்திய நெல் சாகுபடிக்கும், சாதாரண நெல் சாகுபடிக்கும் உள்ள வேறுபாடுகள்:**

| வேறுபாடுகள் | திருந்திய நெல் சாகுபடி | சாதாரண நெல் சாகுபடி |
|---|---|---|
| 1.விதையளவு | ஏக்கருக்கு 3 கிலோ | ஏக்கருக்கு 25 கிலோ |
| 2.நாற்றாங்கால் பரப்பு | ஏக்கருக்கு 1 சென்ட் | ஏக்கருக்கு 8 சென்ட் |
| 3.நாற்று வயது | 14 நாள்கள் | 21 - 30 நாள்கள் |
| 4.இடைவெளி | 25-க்கு 25 செ.மீ. | 5-க்கு 10 செ.மீ. (குறுவை) |

20-க்கு 10 செ.மீ. (சம்பா)

5.நடவு முறை  குறியீட்டுக் கருவி  சாதாரண நடவு முறை

6.நாற்றுகளின் எண்ணிக்கை  குத்துக்கு ஒரு நாற்று  குத்துக்கு 3 - 4 நாற்று

7.நீர்ப்பாசனம்  2 -2.5 செ.மீ. உயரத்துக்கு நீர் கட்டுதல்.பஞ்சு கட்டும் பருவம் வரை முதலில் கட்டிய நீர் வடிந்து மண்ணில் மேற்பரப்பில் சிறு கீரல் வெடிப்புகள் தோன்றிய பின் முதலில் கட்டிய நீர் மறைந்த பின் மண்ணைக் காய விடாமல் மறுபடியும் நீர் கட்டுதல்

8.களை நிர்வாகம்  களைக்கருவியை, நட்ட பிறகு 10- 12 நாள் இடைவெளியில் 4 முறை நடவு வரிசைக்கிடையே குறுக்கும் நெடுக்குமாக உபயோகித்தல்.  நட்ட 3}5ம் நாளில் களைக்கொல்லி உபயோகித்து அல்லது நட்ட 15ம் நாள் கைக்களை எடுத்தல் பின் 30}35 ம் நாள் கைக்களை எடுத்தல்

9. உர நிர்வாகம்  இலை வண்ண அட்டையை பயன்படுத்தி குறைந்த அதிக அளவு தழை, மணி,

சாம்பல் சத்து இடுதல்  அதிகளவு தழை, மணி, சாம்பல் சத்து இடுதல்

10. பூச்சி, நோய் தாக்குதல்  குறைவாக இருக்கும்  அதிகமாக இருக்கும்

11.மகசூல் ஏக்கருக்கு  ஏக்கருக்கு 4.0- 4.5 டன்  ஏக்கருக்கு 2.5- 3.0 டன்

## சிறுதானியப் பயிர் சாகுபடி: விவசாயிகளுக்கு யோசனைகள்



வறண்ட, மானாவாரிப் பகுதி சாகுபடியில் சிறுதானியப் பயிர்கள் முன்னிலை வகிக்கின்றன. குறிப்பாக ஏழை மக்களின் பொருளாதார வளர்ச்சியில் சிறுதானியங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. சோளம், கம்பு, கேழ்வரகு, சாமை, தினை, வரகு, பனி வரகு, குதிரைவாலி ஆகியவை சிறுதானியங்கள் எனப்படும். சிறுதானியப் பயிர்கள் சாகுபடி குறித்து காஞ்சிபுரம் மாவட்டம் காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் (உழவியல்) பெ.முருகன் கூறியது: இந்தியாவில் கேழ்வரகு, தினை, சாமை, வரகு, பனி வரகு, குதிரைவாலி போன்ற ஆறு சிறுதானியப் பயிர்கள் 2.90 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் சிறு தானியங்களின் சாகுபடி பரப்பளவு 19.82 லட்சம் ஹெக்டேரில் இருந்து 7.77 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது. அதே நேரத்தில் இதனுடைய உற்பத்தித் திறன் ஹெக்டேருக்கு 522 கிலோ என்ற நிலையிலிருந்து 1,176 கிலோவாக அதாவது இரு மடங்காக உயர்ந்துள்ளது. இந்த உற்பத்தியின் உயர்வுக்கு உயர் விளைச்சல் ரகங்களையும், வீரிய ஒட்டு ரகங்களையும் விவசாயிகள் சாகுபடி செய்து வருவதே காரணமாகும்.

**தினை, சாமை, வரகு, பனிவரகு சாகுபடி தொழில்நுட்பம்:** தினை, வரகு,

சாமை மலைவாழ் மக்களால் பெரிதும் விரும்பி பயிரிடப்படும் சிறுதானியப் பயிராகும். இது மிகக் கடினமான வறட்சியையும் தாங்கி வளரக் கூடியது. மேலும் பலவகையான மண் வகைகளிலும், மண் வளம் குறைந்த நிலங்களிலும் நன்கு வளரும் தன்மை கொண்டது. இந்தப் பயிர்கள் தமிழகத்தில் பெரும்பாலும் மானாவாரியாகவே பயிரிடப்படுகிறது. தமிழகத்தில் சராசரியாக இந்தப் பயிர்களின் மகசூல் 650 கிலோ ஹெக்டேர் ஆகும். தேர்வு செய்யாத ரகங்களைப் பயிரிடுவதே இவ்வளவு குறைந்த மகசூலுக்கு முக்கியக் காரணமாகும். இதனைத் தவிர்க்க அதிக மகசூல் தரக் கூடிய ரகங்களைத் தேர்வு செய்து சாகுபடி செய்தால் ஹெக்டேருக்கு 1500 - 2000 கிலோ என்கிற அளவுக்கு அதிக மகசூல் பெறலாம்.

**தினை (கோ 7) ரகத்தின் சிறப்பியல்புகள்:** 1. மிக குறுகிய வயது (85 - 90 நாள்கள்), 2. அதிக தூர்கள் (7 - 8), 3. அதிக கதிர் நீளம் (29 செ.மீ.), 4. அதிகப் புரதச் சத்து (13.26 சதவீதம்), 5. கால்சியம் சத்து (0.35 சதவீதம்), 6. திரட்சியான மஞ்சள் நிற தானியம், 7. அதிக மகசூல், 8. பூச்சி, நோய்களை தாங்கி வளரும் தன்மை, 9. வறட்சியைத் தாங்கி அதிக அளவில் விளைச்சல் தரும் கோ(தி) 7 என்ற இந்த தினை ரகம் தமிழகத்தில் கோயம்புத்தூர், திண்டுக்கல், ஈரோடு, சேலம், திருவண்ணாமலை, விழுப்புரம், மதுரை, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களுக்கு மானாவாரியில் சாகுபடி செய்ய ஏற்றதாகும். வரகு ரகங்கள் - கோ 3, ஏபிகே 1, சாமை ரகங்கள் - கோ 2, கோ 3, பனிவரகு ரகங்கள் - கோ 3, கோ 4. மேற்கண்ட பயிர்கள் ஆடி, புரட்டாசிப் பட்டத்தில் மானாவாரியாக பயிரிட ஏற்றது.

**நிலம் தயாரித்தல்:** செம்மண், இருமண் கலந்த நிலங்கள் உகந்ததாகும். கோடை மழையைப் பயன்படுத்தி பயிர் அறுவடைக்குப் பின்பு நிலத்தை சட்டிக் கலப்பை கொண்டு ஆழமாக உழவு செய்ய வேண்டும்.

கோடை உழவினால் மண் அரிமானம் தடுக்கப்பட்ட மழைநீர் சேமிக்கப்படுவதுடன், கோடை மழையில் முளைக்கும் களைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. நிலத்தடியில் இருக்கும் கூட்டுப் புழுக்கள் உழவின்போது மேலே கொண்டு வரப்பட்டு அழிக்கப்படுவதால் பயிர்க் காலத்தில் பூச்சித் தாக்குதல் குறையும். **விதைகளைக் கடினப்படுத்துதல்:** வறட்சியைத் தாங்கி வளர, விதைகளை கடினப்படுத்தி பின்பு விதைக்க வேண்டும். ஒரு சதவீதம் பொட்டாசியம் குளோரைடு கரைசலில் (ஒரு லிட்டர் தண்ணீரில் 10 கிராம் உரம்) விதைகளை 6 மணிநேரம் ஊரவைத்து நிழலில் உலர்த்திய பின்பு விதைக்க வேண்டும். **பூஞ்சாண விதை நேர்த்தி:** விதை மூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த சூடோமோனாஸ், ப்ளோரசன்ஸ் கலவையை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் அல்லது டிரைகோடெர்மா விரிடியை ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்றளவில் நன்கு கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து பின் விதைக்க வேண்டும். **நுண்ணுயிர் உரங்கள் விதை நேர்த்தி:** அசோஸ்பைரில்லம் அல்லது அசோபாஸ் நுண்ணுயிரை விதையுடன் கலந்து இடுவதால் 25 சதவீதம் தழைச்சத்தை சேமிக்கலாம். ஒரு ஹெக்டேருக்கு தேவையான விதையுடன் 600 கிராம் (3 பாக்கெட்கள்) அசோஸ்பைரில்லம் அல்லது அசோபாஸ் நுண்ணுயிர் கலவையை குளிர்ந்த அல்லது அரிசிக் கஞ்சியுடன் கலந்து நிழலில் உலர்த்த வேண்டும். இவ்வாறு கலந்த விதைகளை 24 மணி நேரத்துக்குள் விதைத்துவிட வேண்டும். விதையும் விதைப்பும்: கை விதைப்பு அல்லது விதைப்பான் அல்லது கொர்ரு கருவி கொண்டு வரிசை விதைப்பு செய்யலாம். இப்படி செய்வதால் அதிகப் பரப்பில் மண் ஈரம் காயும் முன்பே விதையை விதைத்து முடிக்கலாம். உரமிடல்: ஒரு ஹெக்டேர் நிலத்தில் அடியுரமாக 12.5 டன் மட்கிய தொழு உரத்தை கடைசி உழவின்போது பரப்பிய பிறகு நிலத்தை உழ வேண்டும். பின்னர் 20 கிலோ தழைச்சத்து, 20 கிலோ மணிச்சத்து ஆகியவற்றை விதைப்பின்

போது அடியுரமாக இட வேண்டும். மேலுரமாக 20 கிலோ தழைச்சத்தை விதைத்த 20 - 25 நாள்கள் கழித்து கிடைக்கும் ஈரத்தைப் பயன்படுத்தி இட வேண்டும். நுண்ணூட்டச் சத்துக் கலவையை 12.5 கிலோ அளவில் மணலுடன் கலந்து நிலத்தின் மேல் சீராகத் தூவ வேண்டும். தூவப்பட்ட உரத்தை நிலத்துடன் கலக்கக் கூடாது.

**களை நிர்வாகம்:** சிறுதானியப் பயிர்களில், விதைத்த 3-ஆம் நாள் பென்டிமெத்தலின் களைக்கொல்லியை ஹெக்டேருக்கு 750 கிராம் என்றளவில் தெளிக்க வேண்டும். நிலத்தில் தெளிக்கும்போது போதியளவு ஈரம் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். பின்பு விதைத்த 20 - 25 நாள்களில் ஒரு இடை உழவு அல்லது கைக் களை எடுக்க வேண்டும்.

**பயிர் களைத்தல்**: விதைத்த 18 - 20-ஆம் நாளில் செடிகளை களைத்து தேவையான பயிர் எண்ணிக்கையைப் பராமரிக்க வேண்டும்.

**பயிர் பாதுகாப்பு:** இந்தப் பயிர்களில் பொதுவாக பூச்சிகள், நோய்கள் தாக்குவதில்லை. அதனால் பயிர் பாதுகாப்பு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

**அறுவடை:** நன்கு காய்ந்து முற்றிய கதிர்களை அறுவடை செய்து, களத்தில் காய வைத்து, அடித்து பின் விதைகளைப் பிரித்தல் வேண்டும். கதிர்கள் நன்கு காய்ந்து, இலைகள் பழுத்தவுடன் அறுவடை செய்ய வேண்டும். அறுவடை இரண்டு முறை செய்யலாம். கதிர்களை களத்தில் நன்கு காயவைத்து தானியங்களை அடித்துப் பிரித்து தூய்மைப்படுத்தி சேமிக்கலாம். தானியங்களைப் பிரித்த பின் உள்ள தட்டையையும் நன்கு உலர்த்தி சேமித்து வைத்தால் ஆண்டு முழுவதும் கால்நடைகளுக்குத் தீவனமாகத்தரலாம்.

**தானிய மகசூல்:** மானாவாரியில் ஒரு ஹெக்டேருக்கு 1500 - 1800 கிலோ தானிய மகசூல் பெறலாம். **தீவன மகசூல்:** மானாவாரியில் ஒரு ஹெக்டேருக்கு 4.5 - 5.30 டன் தட்டை மகசூல் பெறலாம். எனவே, மேலே சொல்லப்பட்ட உழவியல் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிப்பதன்

மூலம் சிறுதானியப் பயிர்களின் தானிய மகசூலை அதிகரிக்கலாம் என்றார் அவர்.

**பயிர் விதையளவு**

(கிலோ - ஹெக்டேர்) பயிர் இடைவெளி

தினை வரிசை விதைப்பு 10 25-க்கு 10 செ.மீ.

சாமை வரிசை விதைப்பு 10 25-க்கு 10 செ.மீ.

வரகு வரிசை விதைப்பு 10 45-க்கு 10 செ.மீ.

பனி வரகு வரிசை விதைப்பு 10 5-க்கு 10 செ.மீ.

குதிரை வாலி வரிசை விதைப்பு 10 25-க்கு 10 செ.மீ.

**அருகாவூர் கிராமத்தில் வேளாண் தொழில்நுட்ப செயல் விளக்கம்**

செய்யாறை அடுத்த அருகாவூர் கிராமத்தில் வேளாண் தொழில் நுட்ப மேலாண்மை முகமைத் திட்ட செயல் விளக்கம் அண்மையில் நடைபெற்றது. 2014 -15 ஆம் ஆண்டில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் வேளாண்மைத் துறை சார்பாக 5 பயனாளிகளுக்கு நேரடி நெல் விதைப்புக் கருவியும், 2 பயனாளிகளுக்கு அசோலா கிட்டும் வழங்கப்பட்டன. நேரடி நெல் விதைப்புக் கருவி மூலம் நெல் பயிர் சாகுபடி செய்த வயலை வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி மேற்பார்வையில், விவசாயிகள் மற்றும் முகமைத் திட்ட அலுவலர்கள் பார்வையிட்டனர். மேலும், ஒருங்கிணைந்த உர மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. முகமைத் திட்டத்தின் கீழ் கால்நடைத் துறை சார்பில் 2 அசோலா கிட்டுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. அருகாவூர் கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த அசோலா தொட்டியை விவசாயிகள் பார்வையிட்டனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## துவரை செடி பாதுகாக்கும் வழிமுறைவேளாண் அதிகாரி விளக்கம்

ஓசூர், ;ஓசூரை அடுத்த, கெலமங்கலம் பகுதி விவசாயிகள், துவரை செடிகளை பாதுகாக்கும் வழிமுறைகள் குறித்து, வேளாண் அதிகாரி அறிவுரை வழங்கினார்.ஓசூரை அடுத்த, கெலமங்கலம் யூனியனுக்கு உட்பட்ட ஜெக்கேரி பகுதியில், துவரை சாகுபடி செய்யப்பட்டுள்ள விவசாய நிலங்களை பார்வையிட்ட, வேளாண் உதவி இயக்குனர் (பொறுப்பு) ராமலிங்கம், துவரை செடிகளை பாதுகாக்கும் வழிமுறைகள் குறித்து பேசியதாவது:கெலமங்கலம் யூனியன் பகுதியில், 1,600 ஹெக்டர் பரப்பளவில் துவரை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. துவரை செடியில், பூக்கள் பூத்துள்ளதால், துவரை காய்கள் நன்கு விளைச்சல் பெற, 2 சதவீதம் அளவுக்கு, டி.ஏ.பி., கரைசலை தெளித்து, பூக்கள் உதிராமல் இருக்குமாறு பார்த்து கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தால், அதிகளவு மகசூல் பெற முடியும்.இவ்வாறு அவர் பேசினார்.உதவி வேளாண்மை அலுவலர் அருள் கணேஷ், டி.ஏ.பி., கரைசலை பயன்படுத்துவது குறித்து, விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காண்பித்தார். ஏற்பாடுகளை, ஆட்மா தொழில்நுட்ப அலுவலர் ஹேமத்குமார் செய்தார். விவசாயிகள் சங்க பிரதிநிதி கிருஷ்ணப்பா நன்றி கூறினார்.

## சத்தியில் அதிக மழை பதிவு

ஈரோடு: சத்தியமங்கலத்தில், அதிகபட்ச மழையளவு பதிவாகி உள்ளது.ஈரோடு மாவட்டத்தில், கடந்த சில நாட்களாகவே பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இடி, மின்னல் நீண்ட நேரம் நீடித்தது. இரவில் கன மழை கொட்டி தீர்த்தது. அதிகபட்சமாக

சத்தியமங்கலத்தில், 74.4 மி.மீ., மழையளவு பதிவானது.ஈரோடு மாவட்டத்தில், பவானிசாகர்,44.4 மி.மீட்டர், ஒரத்துப்பாளையம் அணை,35, கொடிவேரி,30, கோபி,8, எலந்தகுட்டைமேடு,19, பவானி,4.4, அரச்சலூர்,13, சென்னிமலை,22, முத்தூர்,22, மங்களப்பட்டி,12, வெள்ளகோவில்,12.8, காங்கேயம்,68.4 மி.மீட்டர் மழை பெய்தது. ஈரோட்டில், தூரம் மழை பெய்தது.நேற்று காலை, மாலையில், பெரும்பாலான பகுதியில் லேசான சாரல் மழை பெய்தது.

**<u>கன மழையால் நிரம்பிய தடுப்பணைகள்</u>**

குன்னூர் : குன்னூரில் கன மழையால் தடுப்பணைகள் நிரம்பின. நீலகிரி மாவட்டம் குன்னூர் பகுதிகளில் நேற்று நள்ளிரவு முதல் கன மழைபெய்தது. நேற்று காலை 8:00 மணி வரையிலான 24 மணி நேரத்தில் 4.9 செ.மீ.,யும் பர்லியாரில் 5 செ.மீ., மழையும் பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் பர்லியார், குன்னூர், கேத்தியில் அதிகளவில் மழை பெய்துள்ளது. இதனால், அனைத்து தடுப்பணைகளும் நிரம்பி, ஜிம்கானா, ஆரஞ்ச் குரோவ் ஆறு, வி.பி., தெரு, காட்டேரி ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஆரஞ்ச் குரோவ் பகுதியில் உள்ள கன்டோன்மென்ட் தடுப்பணை நிரம்பி அருகில் உள்ள தேயிலைதோட்டம் நாசமடைந்தது. டி.டி.கே., சாலையில் ஏற்பட்ட மண்சரிவு நகராட்சி பொக்லைன் மூலம் அகற்றப்பட்டது. இதேபோல குன்னூர் - மேட்டுப்பாளையம் சாலையில் சில இடங்களில் லேசான மண்சரிவு ஏற்பட்டுள்ளது. நேற்று மேகமூட்டத்துடன் காலநிலை நிலவியது. வெயிலின்றி இதமான காலநிலையால் சுற்றுலா பயணிகள் குதூகலமடைந்தனர். * மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்றுமுன்தினம் இரவு இடியுடன் பலத்த மழை பெய்தது. நேற்று காலை ஊட்டி-மஞ்சகம்பை சாலையில், சாலையோரத்தில் அபாயகரமாக தொங்கி கொண்டிருந்த ராட்சத சீகை மரம் விழுந்தது. காலை நேரத்தில் போக்குவரத்துக்கு

இடையூறு ஏற்பட்டதை அடுத்து, வனத்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ பகுதிக்கு வனவர் சுகுமார் தலைமையில் வன ஊழியர்கள் வந்து சாலையில் விழுந்த மரத்தை அப்புறப்படுத்திய பின் போக்குவரத்து சீரானது.

## ரூ.1.36 லட்சத்துக்குவாழைத்தார் ஏலம்

திருச்சி,: ஒருங்கிணைந்த திருச்செந்துறை வாழை வளாகத்தில் ஒரு லட்சத்து, 36 ஆயிரம் ரூபாய் மதிப்பில் வாழைத்தார் ஏலம் நடந்தது. வாழைத்தார் ஏலத்தில், கரூர் மாவட்டடம், குளித்தலை, தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு, ஈச்சாங்கோட்டை, திருச்சி, அந்தநல்லூர், ஜீயபுரம் ஆகிய பகுதிகளை சேர்ந்த, 12 விவசாயிகள், 803 வாழைத்தார்களை ஏலத்துக்கு கொண்டு வந்தனர்.பூவன், ரஸ்தாளி, மொந்தன், கற்பூரவள்ளி உள்ளிட்ட வாழைத் தார்கள் அதிகளவில் இருந்தது. 12, வியாபாரிகள் ஏலத்தில் பங்கேற்றனர். அதிகப்பட்சமாக ஒரு வாழைத்தார், 385 ரூபாய்க்கும், சராசரியாக, 170 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, ஒரு லட்சத்து, 36 ஆயிரத்து, 510 ரூபாய் மதிப்பில் ஏலம் நடந்தது. பூவன் ஒரு தார், 330 ரூபாய்க்கும், ரஸ்தாளி, 385 ரூபாய்க்கும், மொந்தன், 320 ரூபாய்க்கு விற்றது. முதன் முறையாக, வாழை திசுக்களில் இருந்து உற்பத்தி செய்யப் பட்ட, ரோபஸ்டோ வாழை, 25 பெட்டிகளில் ஏலத்துக்கு வந்தது. 20 கிலோ எடை கொண்டு ஒரு பெட்டி, 350 ரூபாய்க்கு விற்றது.

## பட்டு வளர்ச்சி துறை ஆய்வாளர் பணிக்குகலெக்டர் அழைப்பு

திருவாரூர் :திருவாரூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில், இளநிலை பட்டு வளர்ச்சி ஆய்வாளர் பணிக்கு பதிவு செய்தவர்கள் பதிவை சரி பார்த்து கொள்ளுமாறு கலெக்டர் மதிவாணன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் கூறியிருப்பதாவது,இளநிலை பட்டு வளர்ச்சி ஆய்வாளர் பணியிடங்களை நிரப்புவதற்காக, பட்டு வளர்ச்சி துறை இயக்குனரிடமிருந்து தகுதிவாய்ந்த பதிவுதாரர்களின் விபரம்

கேட்டு வரப்பெற்றுள்ள அறிவிப்பின்படி, திருவாரூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இந்த பணிக்கு பதிவு செய்துள்ளவர்கள் பதிவை, திருவாரூர் நேதாஜி சாலையில் இயங்கி வரும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரில் சென்று சரிபார்த்து கொள்ளலாம். ஜூலை, 1ம் தேதியை, எஸ்.சி.ஏ., எஸ்.சி., எஸ்.டி ஆகிய வகுப்பினருக்கு, 33க்கு மிகாமலும், பி.சி., எம்.பி.சி., பி.சி.எம்., மற்றும் ஒ.சி., வகுப்பினருக்கு, 28க்கு மிகாமலும் இருக்க வேண்டும்.இவ்வாறு கலெக்டர் மதிவாணன் தெரிவித்துள்ளார்.

## மூன்றாண்டுகளுக்கு பிறகு மஞ்சளாறு அணை நிரம்பியது

தேவதானப்பட்டி:தேவதானப்பட்டி அருகே உள்ள மஞ்சளாறு அணையின் மொத்த உயரம் 57 அடி. மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள வரட்டாறு, மூலாறு, தலையாறு, மஞ்சளாறு பகுதிகளில் பெய்யும் மழைநீர் அணையில் தேங்குகிறது. இவ்வாறு தேங்கும் நீரை ஆதாரமாக கொண்டு திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் 5,200 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று முதல்போக நெல் சாகுபடி நடந்து வருகிறது. கடந்த மூன்றாண்டுகளாக நீர்பிடிப்பு பகுதியில் மழை இல்லை. பாசனத்திற்கும் தண்ணீர் திறக்கவில்லை. இதனால் கடந்த காலங்களில் தேவதானப்பட்டி, சாத்தாகோயில்பட்டி, கெங்குவார்பட்டி, பழையவத்தலக்குண்டு ஆகிய பகுதிகளில் நெல் சாகுபடியை விவசாயிகள் தவிர்த்தனர். இந்நிலையில் கடந்த சில நாட்களாக அணையின் நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்து வருகிறது. தற்போது அணையில் 55 .05 அடி நீர் உள்ளது. அணைக்கு 283 கனஅடிநீர் வந்து கொண்டிருக்கிறது. 276 கன அடிநீர் மறுகால்மடை வழியாக வெளியேற்றப்படுகிறது. ஆற்றில் வெளியேறும் உபரி நீர் சாத்தாகோயில்பட்டி செங்குளம், கெங்குவார்பட்டி மத்துவார்குளம், கருவேலங்குளம், வீரன்குளம், வேடன்குளம், பெரியகுளம், குன்னுவராயன்கோட்டை கண்மாய், ஆலங்குளம், சிவஞானபுரம் சிறுகுளம் கண்மாய்களுக்கு செல்கிறது.

மூன்றாண்டுகளுக்கு பிறகு மஞ்சளாறு அணை நிறைந்துள்ளது. உரிய நேரத்தில் முதல்போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறக்கும் வாய்ப்பு உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## கும்பக்கரையில் வெள்ளப்பெருக்கு

பெரியகுளம்: பெரியகுளத்தில் இருந்து 8 கி.மீ., தொலைவில் மேற்குத்தொடர்ச்சி மலை அடிவாரத்தில் கும்பக்கரை அருவி உள்ளது. கொடைக்கானல் வனக்கோட்டம், பெரியகுளம் வனத்துறை நிர்வாகத்திற்கு உட்பட்டது. கும்பக்கரைஅருவிக்கு கொடைக்கானல் மலைப்பகுதி "குண்டஞ்சோலையில்' இருந்து தண்ணீர் வருகிறது. நேற்று முன்தினம் இரவு பெய்த கனமழையால் கும்பக்கரை அருவிக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. அருவியின் இருபுறங்களிலும் பாறைகளை மூடியபடி கண்ணிற்கு எட்டிய தூரம் தண்ணீர் பெருக்கெடுத்து காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. * ஒரே மாதத்தில் இருமுறை காட்டாற்று வெள்ளம்: அக்.,1ம் தேதி காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. தொடர்ந்து மூன்று நாட்கள் குளிக்கதடை விதிக்கப்பட்டது. அக்.,4க்கு பிறகு குளிக்க அனுமதிக்கப்பட்டது. இந்நிலையில் நேற்று முன்தினம் பெய்த கனமழையால், அருவியில் குளிக்க நேற்றும், இன்றும் (அக்.,16) தடை விதிக்கப்பட்டுள்ளது. மழை தொடர்ந்தால் குளிக்கதடை நீடிக்கும், என வனத்துறை தெரிவித்துள்ளது.

## ஒரே நாளில் 15 அடி உயர்ந்த சோத்துப்பாறை அணை

பெரியகுளம் :கொடைக்கானல் மலைப்பகுதிகளில் பெய்து வரும் மழையால் சோத்துப்பாறை அணை ஒரே நாளில் 15 அடி உயர்ந்தது. ஓரிரு நாளில் அணை நிரம்பும் வாய்ப்பு உள்ளது. பெரியகுளத்தில் இருந்து 8 கி.மீ., தொலைவில் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் சோத்துப்பாறை அணை உள்ளது. அணையின் மொத்த உயரம் 126 அடி. நீர் மட்டம் செப்.,22ல் 25 அடியாகவும், செப்.,26ல் 36 அடியாக இருந்தது. கொடைக்கானல் மலைப்பகுதியில் சாரல் மழை மற்றும் அவ்வப்போது

கனமழை பெய்து வருவதால் செப்.,27ல் 39 அடியாகவும், செப்.,28ல் 49.3 அடியாகவும், செப்.,29ல் 63.96 அடியாகவும் இருந்தது. அக்.,5ல் 85 அடியாக உயர்ந்தது. சாரல் மழை நீடிப்பால் அக்.,11ல் 93, அக்.,14ல் 100 அடியைத் தாண்டியது. இந்நிலையில் நேற்று முன்தினம் பெய்த கனமழையால் ஒரே நாளில் 15 அடி உயர்ந்து அணை நீர்மட்டம் 115.12 அடியானது. வினாடிக்கு 235 கனஅடி நீர் வரத்து உள்ளது. ஓரிரு நாட்களில் அணை நிரம்பி வழியும் என எதிர்பார்க்கப்படுகிறது. *விவசாயிகள் மகிழ்ச்சி: கனமழை பெய்யும் பட்சத்தில் நீர் மட்டம் 126 அடியை ஓரிரு நாளில் தொடும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். பழைய ஆயக்கட்டு பகுதிகளான பெரியகுளம் கண்மாய், தாமரைக்குளம் கண்மாய், பாப்பிபட்டி கண்மாய்களில் உள்ள 1,892 ஏக்கர் விவசாய நிலங்களும். நூற்றுக்கணக்கான ஏக்கர் மறைமுக விவசாய நிலங்களும் பயன்பெறும். புதிய ஆயக்கட்டு பகுதிகளான லட்சுமிபுரம் பகுதிகளில் உள்ள 1040 ஏக்கர் விவசாய நிலங்களும் பயன்றுபெறும். தென்கரை புரவு, மேலப்புரவு, கீழப்புரவு, நடுப்புரவு விவசாயிகள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

## <u>பார்த்திபனூரில் கொட்டி தீர்த்த மழை</u>

பரமக்குடி : பார்த்திபனூர், பரமக்குடி பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களாக கொட்டி தீர்த்த மழையால், ரோடுகளில் வெள்ளம் போல் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் வாகன ஓட்டிகள் பெரிதும் அவதிப்பட்டனர். பார்த்திபனூரில் நேற்று காலை ஒரு மணி நேரத்திற்கும் மேலாக இடைவிடாது மழை பெய்ததால், ரோடுகளில் மழை நீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. இதுதவிர, பஸ் ஸ்டாண்ட் நுழைவு வாயில் பகுதிகளில் தேங்கிய மழைநீரால் பஸ்கள் உள்ளே சென்று வர மிகவும் சிரமப்பட்டன. அதேபோல், பரமக்குடியிலும் பல மணி நேரம் மழை பெய்தது. டூ வீலர் ஓட்டுனர்கள் ரோடுகளில் காணப்படும் பள்ளங்களில் சிக்கி கீழே விழுந்து எழுந்து சென்றனர்.

மேலும், உழவர் சந்தை பகுதியில் காய்கறி, கோழி, ஆடு, மீன் உள்ளிட்ட இறைச்சி கடைகளை சுற்றி மழை நீர் குளம் போல் தேங்கி நின்றதால், சாக்கடை நீரும் கலந்து துர்நாற்றம் வீசியது. கடந்த 2 நாட்கள் தொடர்ந்து பெய்த மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. எனவே, நகராட்சி நிர்வாகம் இப்பகுதியில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்திக் கொடுத்து மழை நீர் தேங்காமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## <u>விவசாயிகளுக்கு பயிற்சி</u>

விருதுநகர், :விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி கோவிலாங் குளம் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடந்தது. வேளாண் துணை இயக்குனர் செண்பக ராஜ், வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பால்பாண்டி தலைமை வகித்தனர். பயிர் வாரியாக உயர் விளைச்சல் ரகங்கள், மகசூலை அதிகபடுத்த தொழில்நுட்ப உத்திகள், ஒருங்கிணைந்த உர நிர்வாகம், களைக்கட்டுப்பாடு முறை, பூச்சி கட்டுப்படுத்துதல் குறித்து பேராசிரியர் தீபாகரன் விளக்கினார். ஆறு ஒன்றியங்களை சேர்ந்த 25 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## <u>மீன் தர பாதுகாப்பு மையம் அமைக்க தூத்துக்குடிக்கு ரூ. 3.05 கோடி நிதி ஒதுக்கீடுமீன் வள பல்கலை துணை வேந்தர் தகவல்</u>

தூத்துக்குடி:""தூத்துக்குடி மீன் வளக்கல்லூரியில், தேசிய அளவில் மீன் தர பாதுகாப்பு மையம் அமைக்க, இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் 3.05 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக, மீன் வள பல்கலை துணை வேந்தர் பாஸ்கரன் மணிமாறன் தெரிவித்துள்ளார்.அவர் தெரிவித்திருப்பதாவது: தூத்துக்குடியில் உள்ள மீன் வளக்கல்லூரியில் மீன் தர பாதுகாப்பு மையம் அமைக்கப்படவுள்ளது. தேசிய பரிந்துரை ஆய்வகமாக இது செயல்படும். தொழில் நுட்ப ரீதியாக தகுதி வாய்ந்த மனிதவளத்தை உருவாக்கும். பிற ஆராய்ச்சியாளர்கள், பேராசிரியர்கள்,

விஞ்ஞானிகளுக்கு மீன் தரம் குறித்து பயிற்சி வழங்கப்படும். உணவு தர ஆய்வாளர்கள், உணவு கட்டுப்பாட்டு அதிகாரிகள்,தொழில் நுட்ப நிபுணர்களுக்கும் பயிற்சி வழங்கப்படும். பணிகள் : நுண்ணுயிரி பிரச்னையை மூலக்கூறு தொழில் நுட்பம் மூலம் நிர்ணயித்தல், உறை பதனம் செய்யப்படும் இறால், கணுக்காலிகளில் உள்ள வேதிப்படிவுகளை மதிப்பிடுதல்.புதிய சேதாரமில்லாத இயற்பியல் முறைகளை உருவாக்குதல். ஏற்றுமதி தரம் வாய்ந்த மீன்களின் உண்மைத்தன்மை கண்டறிய மரபணு குறியீடு உருவாக்குதல் இந்த மையத்தின் சிறப்பு அம்சமாகும். புதிய கருவிகள்: 1.73 கோடி ரூபாயில் கன உலோகங்கள் பகுப்பாய்வுக்கு ஐசிபி- எம்எஸ். பூச்சி கொல்லிகளின் பகுப்பாய்வுக்கு ஜிஎஸ்-எம்எஸ் உயிர் நஞ்சு கண்காணிப்புக்கு யுபிஎல்சி போன்ற கருவிகள் அமைக்கப்படவுள்ளது. இதன் மூலம் மீன்களுக்கான நோய் கிருமிகள் கண்டறிதல், ஆபத்தான வேதியியல் பொருட்களுக்கு தர நிலை உருவாக்கி அரசின் கொள்கைமுடிவுகளுக்கு வழிகாட்டுதல் செய்யப்படும். மீன் பிடி இடங்கள் முடிவு: அரசின் கொள்கை முடிவுகளின் படி மீன் பிடி இடங்களை தடை செய்தல், மீன் பிடி இடங்களை மூடுதல், போன்ற செயல்களுக்கு மாநில அரசுக்கு வழிகாட்டுதல் செய்யப்படும். கடந்த ஆண்டு2013-14 ல் மீன் உணவு மூலம் 30,213 கோடி ரூபாய் அன்னிய செலாவணியாக இந்தியா பெற்றுள்ளது.மீன் உணவு தரம் உறுதி, பாதுகாப்புக்காக இந்த நடவடிக்கையின் மூலம் இது மேலும் அதிகரிக்க உதவும், என, மீன் வளப்பல்கலை துணை வேந்தர் பாஸ்கரன் மணிமாறன் தெரிவித்தார்.

இன்றைய வேளாண் செய்திகள்

**தீபாவளி பண்டிகை எதிரொலி : மஞ்சளுக்கு கூடுதல் விலை**



ஈரோடு: மஞ்சள் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.600 வரை விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்த 29ம் தேதி நடந்த மஞ்சள் ஏலத்தில் அதிகபட்சமாக ஒரு குவிண்டால் விரலி மஞ்சள் ரூ.6,051க்கும், கிழங்கு மஞ்சள் ரூ.5,515க்கும் விற்கப்பட்டது. இந்நிலையில், நேற்று நடந்த ஏலத்தில் அதிகபட்சமாக விரலி மஞ்சள் ரூ.6,689க்கும், குறைந்தபட்சமாக ரூ.6,143க்கும் விற்கப்பட்டது. கிழங்கு மஞ்சள் அதிகபட்சம் ரூ.6,143க்கும், குறைந்தபட்சம் ரூ.5,764க்கும் விற்பனையானது. செம்மாம்பாளையம் மார்க்கட்டில் நேற்று நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி அதிகபட்சமாக ரூ.6,669க்கும், குறைந்தபட்சம்

ரூ.3,399க்கும், கிழங்கு மஞ்சள் அதிகபட்சமாக ரூ.6,039க்கும், குறைந்தபட்சம் ரூ.3,219க்கும் விற்கப்பட்டது. கடந்த மாதம் ஒரு குவிண்டால் விரலி மஞ்சள் அதிகபட்சமாக ரூ.6,051க்கு விற்கப்பட்ட நிலையில் நேற்று குவிண்டால் ஒன்றுக்கு ரூ.600 வரை விலை உயர்ந்து ரூ.6,689க்கு விற்றது. தீபாவளிக்கு தேவை அதிகரித்துள்ளதால் மஞ்சளுக்கு கூடுதல் விலை கிடைக்கிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## வெப்ப சலனம் காரணமாக தமிழகத்தில் மழை : சென்னை வானிலை ஆய்வு மையம்




சென்னை : வெப்ப சலனம் காரணமாக வளி மண்டல மேல் அடுக்கில் ஏற்பட்டுள்ள காற்று சுழற்சியால் தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் இன்று மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வங்கக் கடலில் ஏற்பட்ட ஹூட்ஹூட் புயல் காரணமாக ஆந்திராவில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டது. இதையடுத்து, தமிழக கடலோரப் பகுதியில் வறண்ட வானிலை காணப்பட்டது. தமிழகத்தில் வெயில் நிலவியது. இதனால் வெப்ப சலனம் ஏற்பட்டு வளி மண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி ஏற்பட்டுள்ளது. இதனால் தமிழகத்தில் நேற்று பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக அம்பாசமுத்திரத்தில் 80 மிமீ மழை பெய்துள்ளது. சத்திய மங்கலம், காங்கேயம், கமுதி 70 மிமீ, ஆய்க்குடி 60 மிமீ, பேச்சுப்பாறை, மேட்டுப்பாளையம், இலுப்பூர், குன்னூர் 50 மிமீ, பவானிசாகர்,

தென்காசி, செந்துறை, கோத்தகிரி 40 மிமீ, பெரியநாயக்கன்பாளையம், கொடைக்கானல், உதகமண்டலம், உத்தமபாளையம் 30 மிமீ மழை பெய்துள்ளது. சென்னையில் நேற்று மதியம் பல இடங்களில் திடீர் மழை பெய்தது. இந்நிலையில், வெப்ப சலனம் தொ டர்ந்து நீடிப்பதால் வளி மண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி நிலை கொண்டுள்ளது. இதனால் தமிழகத்தில் பரவலாக மழை பெய்யும். கேரளா, புதுச்சேரி, ஆந்திர கடலோரப் பகுதி, கர்நாடகா உள்ளிட்ட பகுதிகளில் இன்று மழை பெய்யும். சென்னையில் பொதுவாக மேகமூட்டம் காணப்படும். ஒருசில இடங்களில் இடியுடன் மழை பெய்யும். இந்நிலையில் இந்த ஆண்டுக்கான வட கிழக்கு பருவமழை வரும் 20ம் தேதி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நடவு முறை துவரை சாகுபடியில் அதிக லாபம் வேளாண் அதிகாரி விளக்கம்

புதுக்கோட்டை, : புதுக் கோட்டை மாவட்டத்தில் நடவுமுறை துவரை சாகுபடி செய்து அதிக லாபம் பெறலாம் என விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி ஆலோசனை வழங்கியுள்ளார். இது குறித்து வேளாண் உதவி இயக்குனர் ரவிச்சந்திரன் கூறியதாவது: பாரம்பரிய துவரை சாகுபடி முறையில் நீர் தேவை மற்றும் சாகுபடி செலவு மிகவும் அதிகமாக உள்ளது, நடவு துவரை சாகுபடி செய்வதினால் தண்ணீர் செலவு மற்றும் சாகுபடி செலவினம் குறைந்து மகசூல் அதிகமாக கிடைக்கிறது. துவரம் பருப்பினை உணவுடன் உட்கொள்வதால் சரிவிகித உணவு கிடைப்பதுடன் ஊட்டச்சத்து குறைப்பட்டினை குறைக்க முடியும். பயறு உற்பத்தில் தன்னி றைவு பெற, பயறு சாகுபடி பரப்பினை அதிகரிக்கும நோக்கில் வேளாண் துறை மூலம் பயறு இயக்கத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இதில் நடவு முறை துவரை சாகுபடி முக்கியமானதாகும். நடவு முறை துவரைக்கு நாற்றங்கால் அமைக்க கோ.ஆர்.ஜி7 ரகத்திற்கு புரட்டாசி பட்டமும், ஏ.பி.கே.1 மற்றும் வம்பன் 3

ரகத்திற்கு ஐப்பசி பட்டமும் ஏற்ற பருவமாகும். 6 அங்குலத்திற்கு 4 அங்குலம் அளவுள்ள பாலித்தீன் பைகளில் இரண்டு பக்கங்களிலும் துளையிட்டு மண் மற்றும் எரு கலந்த கலவையை நிரப்ப வேண்டும் ஒரு ஏக்டருக்கு 6,250 பைகள் போதுமானது. ஒரு ஏக்டருக்கு 2.5 கிலோ விதை போதுமானது. விதை மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன் ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் ட்ரைகோடெர்மா விரிடி என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். துவரை செடியை நடவு செய்யும் போது வரிசைக்கு வரிசை 5 அடிசெடிக்கு செடி 3 அடி இடைவெளி இருக்க வேண்டும். நடவு செய்த 20 நாள் ஒரு லிட்டர் தண்ணீரக்கு 2 மில்லி இமேசிதையபர் களை கொல்லி தெளிக்க வேண்டும். நடவு செய்த 20ல் இருந்து 30 நாட்களுக்குள் செடியின் நுனியை கிள்ளி விட வேண்டும். பூ உதிர்வை தடுக்க, பூக்கும் சமயத்தில் ஒரு லிட்டர் நீரில் 0.5 மி.லி பிளானோபிக்ஸ் என்ற பயிர் ஊக்கியை சேர்த்து கை தெளிப்பான் மூலம் மாலை வேளையில் தெளிக்க வேண் டும். ஏக்டருக்கு 10 கிலோ 4 கிலோ டி.ஏ.பி உரத்தை 50 லி. நீரில் நீரில் கரைத்து 12 மணிநேரம் ஊற வைத்து பின்பு தெளித்த நீரை மட்டும் வடிக்கட்டி இக்கரைசலை 500 லி. நீரில் கலந்து பூக்கும் தருணத்தில் 15 நாள் இடைவெளியில் 2 முறை தெளிக்க வேண்டும். நடவுமுறையில் துவரை சாகுபடி செய்வதால் எக்டருக்கு 2.5 மெ.டன் மகசூல் பெற வாய்ப்புள்ளது. மேலும் விபரங்களுக்கு புதுகை வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி தகுந்த ஆலோசனைகளை பெற்றுகொள்ளலாம் என்றார்.

## ***சீர்காழியில் 50 சதவீத மானியத்தில் களைக்கொல்லி வழங்கும் விழா***

*சீர்காழி,:* சீர்காழி அருகேயுள்ள காத்திருப்பு கிராமத்தில் வேளாண் துறை சார்பில் நெல் நடவு செய்த விவசாயிகளுக்கு களைகளை கட்டுப்படுத்த தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய விலையில் களைக்கொல்லி வழங்கும் விழா நடைபெற்றது. வேளாண்மை உதவி

இயக்குநர் வெற்றி வேலன் தலைமை வகித்தார். தோட்டக்கலை உதவி இயக்குநர் கணேசன் முன் னிலை வகித்தார். வேளாண் அலுவலர் எழில்ராஜா வரவேற்றார். வேளாண் உதவி இயக்குநர் 50 சதவீத மானிய விலையில் விவசாயிகளு க்கு களைக் கொல்லிகளை வழங்கினார். அவர் பேசுகையில்... நெற்பயிரில் 2 அல்லது 3 இலைகள் தோன்றிய களைகளை அழிக்க ஒரு ஏக்கருக்கு 80 மில்லி பிஸ்பைரி சோடியம் மருந்தினை 1 லிட்டர் நீரில் கலந்து அதனுடன் 20 கிலோ மணலை சேர்த்து சீராக வயலில் தூவ வேண்டும் அல்லது 200 லிட்டர் நீரில் கலந்து கைதெளிப்பான் மூலம் காலை வேலையில் வய லில் பின்னோக்கி தெளிக்க வேண்டும் என்றார். இதில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் களைக்கொல்லி வழங்கப்பட்டது. இதில் உதவி வேளாண்மை அலுவலர் விஜய் அமிர்தராஜ், அட்மா அலுவலர் ராஜசேகரன், கிடங்கு மேலாளர் பால முரளி கலந்து கொண்டனர். வேளாண்மை அலுவலர் எழில்ராஜா நன்றி கூறினார்.

## <u>கீழ்பவானி வாய்க்காலில் நடவு முடிந்த பகுதிகளில் முறைநீர் பாசனம் அமல்</u>

ஈரோடு,: கீழ்பவானி வாய்க்காலில் நெல் நாற்று நடவு செய்த பகுதிகளில் முறைநீர் பாசனம் அமல்படுத்தப்பட்டுள்ளதாக பொதுப்பணித்துறையினர் தெரிவித்துள்ளனர். பவானிசாகர் அணையிலிருந்து கீழ்பவானி வாய்க்கால் பாசனத்துக்குட்பட்ட இரண்டாம் மண்டல நன்செய் பாசன பகுதியிலுள்ள 1 லட்சத்து 3500 ஏக்கர் நிலங்களுக்கு கடந்த ஆகஸ்ட் 15ம் தேதி முதல் தண்ணீர் திறக்கப்பட்டது. 3 ஆண்டு இடைவெளிக்கு பிறகு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் பெரும்பாலான விவசாயிகளும் நெல் சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது, நெல் நாற்று நடவு முடிந்த கிளை வாய்க்கால் பகுதிகளில் முறைநீர் பாசனத்தை அமல்படுத்தியுள்ளனர். இதுகுறித்து பொதுப்பணித்துறையினர் கூறுகையில், பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில்

தண்ணீர் திறக்கப்பட்டுள்ள நிலையில் தொட்டம்பாளையம், நல்லூர், உக்கரம், எலத்தூர் செட்டிபாளையம், கடத்தூர், குருமந்தூர், கவுந்தப்பாடி, காஞ்சிகோவில், பள்ளபாளையம், சித்தோடு, நசியனூர், ஈரோடு வரையிலும் நெல் நாற்று விடும் பணி முடிவடைந்து விட்டது.எனவே, இப்பகுதிகளில் தற்போது முறைநீர் பாசனம் அமல்படுத்தப்பட்டுள்ளது. அதேசமயம் ஊஞ்சலூர் கிளை வாய்க்கால், சென்னசமுத்திரம் மற்றும் காங்கயம் கிளைவாய்க்கால்களில் தற்போது தான் நாற்று நடவு பணிகள் தீவிரமடைந்துள்ளன. எனவே நாற்று நடவு முடிந்துள்ள பகுதிகளில் இம்மாத இறுதி வரையிலும் தொடர்ந்து தண்ணீர் திறக்கப்படும். இம்மாத இறுதிக்குள் கீழ்பவானி வாய்க்கால் பாசனத்துக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் நடவு பணிகள் நிறைவு பெற்று விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. பவானிசாகர் அணையில் தற்போது 10.9 டிஎம்சி மட்டுமே நீர்இருப்பு உள்ளதால் பாசன காலம் முழுவதும் பற்றாக்குறையின்றி நீர்விநியோகம் செய்ய வேண்டும் என்பதற்காகவே முறைநீர் பாசனம் அமல்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே முறைநீர் பாசன முறையில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ள தடப்பள்ளி அரக்கன்கோட்டை பாசன பகுதிகளில் தற்போது அறுவடை பணி துவங்கியுள்ளதால் அங்கு நீர்திறப்பு 300 கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது என்றனர்.

## <u>பெரம்பலூரில் மழை விவசாயிகள் மகிழ்ச்சி 2மணி நேரம் பெய்தது</u>

பெரம்பலூர்,: பெரம்பலூரில் நேற்று அதிகாலை 2மணி நேரத்திற்கு இடியு டன் பலத்தமழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். பெரம்பலூர் மாவட்டத்தின் ஆண்டுசராசரி மழையளவு 908மி.மீ ஆகும். இதில் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் குளிர்கால மழையாக 28மி.மீ மழையும், மார்ச், ஏப்ரல், மே ஆகிய 3மாதங்களில் கோடைகால மழையாக 91மி.மீ மழையும், ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர்ஆகிய 4 மாதங்களில் தென்மேற்கு பருவமழையாக

314மி.மீ மழை யும், அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய 3 மாதங்களில் வடகிழக்குப் பருவ மழை யாக 475மி.மீ மழை யும் என சேர்த்து 12 மாதங்களில் 908மி.மீ மழை பெய்கிறது.இதில் ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் பெய்யக்கூடிய தென் மேற்கு பருவமழை நடப் பாண்டு 280.70மி.மீ மட்டுமே பெய்தது. இது தென்மேற்குப் பருவமழையின் ஆண்டு சராசரியைக் காட் டிலும் 33.30மி.மீ குறை வாகும். நேற்று அதிகாலை இடி, மின் னலுடன் பெரம் பலூரில் பலத்த மழை பெய்தது. அதி காலை 4மணிக்குத் தொடங்கி, 6 மணிவரை தொடர்ந்து 2மணிநேரம் கனமழை பெய்தது. தொடர்ந்து காலை 8.30மணிக்குத் தொடங்கி 9மணிவரை பரவலாக நல்ல மழை பெய்தது. இதனால் மாவட்ட அளவில் அதிகப்படியான நிலப்பரப்பில் மக்காச்சோளம், பருத்தி, சின்னவெங்காயம் சாகுபடி செய் திடும் விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பெரம்பலூர் மாவட்டத்தில் 24 மணிநேரத்தில் பதிவான மழை அளவு விபரம்: பெரம்பலூர்: 19 மி.மீ. வெண்பாவூர் 9மி.மீ. தழுதாழை23மி.மீ. செட்டிக்குளம் 3மி.மீ. மொத்த மழை அளவு 54மி.மீ. சராசரி 10.8 மி.மீ.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**குமரி மாவட்டத்தில் 2–வது நாளாக கனமழை**

குமரி மாவட்டத்தில் நேற்று 2–வது நாளாக மழை பெய்தது.

மழை அளவு

குமரி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு கனமழை பெய்து அணை, குளங்களை நிரப்பியது. அதன்பிறகு ஓய்ந்துபோன மழை, நேற்று முன்தினம் இரவு தொடங்கியது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி பேச்சிப்பாறை பகுதியில் 54 மி.மீ., பெருஞ்சாணியில் 1.2 மி.மீ., சிற்றார்

(1)–ல் 36.4 மி.மீ., சிற்றார் (2)–ல் 32.2 மி.மீ., மாம்பழத்துறையாறு அணைப்பகுதியில் 30 மி.மீ, குளச்சலில் 46 மி.மீ, புத்தன்அணையில் 1.4 மி.மீ, நாகர்கோவிலில் 10 மி.மீ, பாலமோர் பகுதியில் 38.2 மி.மீ. மழை பதிவானது. இதன்காரணமாக பேச்சிப்பாறை அணைக்கு 375 கனஅடியும், பெருஞ்சாணிக்கு 246 கனஅடியும், சிற்றார் (1) அணைக்கு 212 கனஅடியும் தண்ணீர் வந்தது. வெளியேற்றமாக பெருஞ்சாணியில் இருந்து 510 கனஅடியும், சிற்றார் (1) அணையில் இருந்து 200 கனஅடியும் தண்ணீர் பாய்ந்தது.

கனமழை பெய்தது

இந்நிலையில் நேற்று காலை வழக்கம்போல வெயில் அடித்தது. ஆனால் பிற்பகலுக்கு பிறகு நிலைமை மாறி, வானில் கருமேகங்கள் திரண்டன. அடுத்த சில நிமிடங்களில் மழை பெய்தது. சுமார் 45 நிமிடங்கள் பெய்த இந்த மழை, நாகர்கோவில், தக்கலை, மார்த்தாண்டம், திருவட்டார், குலசேகரம், அருமனை, கருங்கல், புதுக்கடை, குளச்சல் உள்பட மாவட்டம் முழுவதும் பரவலாக இருந்தது. குறிப்பாக மார்த்தாண்டம் சுற்றுவட்டார பகுதிகளில் கனமழை பெய்தது. நாகர்கோவில் பகுதியில் நேற்று மதியத்துக்கு பிறகு 30 மி.மீ. மழை பதிவானது. மழை காரணமாக ரோடுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. வாகனங்கள் அதில் தள்ளாடிச் சென்றன. பள்ளி, கல்லூரி மாணவ–மாணவிகள் மற்றும் பொதுமக்கள் நனைந்துகொண்டே வீடு திரும்பினார்கள். மழையின் வருகை விவசாயிகளை மகிழ்ச்சிப்படுத்தி உள்ளது.

குமரி மாவட்டத்தில் பல இடங்களில் பரவலாக மழை பெய்திருப்பினும், கன்னியாகுமரி சுற்றுவட்டார பகுதியில் மழை பெய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## நெல்லை மாவட்டத்தில் 2–வது நாளாக பரவலாக மழை குற்றாலத்தில் குளிக்க தடை



நெல்லை,

நெல்லை மாவட்டத்தில் நேற்று 2–வது நாளாக பரவலாக மழை பெய்தது. மழை காரணமாக குற்றாலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் அருவியில் குளிக்க தடை விதிக்கப்பட்டு உள்ளது.

பரவலாக மழை

நெல்லை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெயில் சுட்டெரித்தது. நேற்று முன்தினம் திடீர் என மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது. நேற்று 2–வது நாளாக மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து உள்ளது. இதனால் வெப்பம் தணிந்தது. பல்வேறு ஊர்களில் காலையில் வெயில் வாட்டி வதைத்தாலும், மாலை நேரத்தில் மழை தூறியது. நெல்லை மற்றும் பாளையங்கோட்டையில் மதியத்துக்கு மேல் வானம் மேகமூட்டமாக இருந்தது. மாலையில் திடீர் என்று மழை பெய்தது. சிறிது நேரமே மழை பெய்தது. நெல்லை சந்திப்பு பஸ் நிலையம், ஸ்ரீபுரம் போன்ற பகுதிகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது.

குற்றாலத்தில் குளிக்க தடை

தென்காசி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் காலையில் வெயில் சுட்டெரித்தது. மதியம் வானம் மேகமூட்டமாக இருந்தது. தொடர்ந்து

மதியம் 1 மணியில் இருந்து 2 மணி வரை ஒரு மணி நேரம் மழை கொட்டி தீர்த்தது. மழை காரணமாக குற்றாலம் மெயின் அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. மாலையில் அருவியில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டது. செங்கோட்டையில் மதியம் 1 மணிக்கு மேல் ½ மணி நேரம் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. கடையநல்லூரியில் சிறிது நேரம் மட்டுமே மழை பெய்தது.

<u>பாவூர்சத்திரம்</u>

பாவூர்சத்திரம், ஆலங்குளம் பகுதிகளில் மதியம் பலத்த மழை கொட்டியது. சுமார் 2 மணி நேரத்துக்கும் மேலாக மழை பெய்தது.

இதேபோல், கடையம், ஆழ்வார்குறிச்சி, பொட்டல்புதூர் பகுதிகளிலும் மதியத்துக்கு மேல் ஒரு மணிநேரத்துக்கும் மேலாக மழை நீடித்தது. பின்னர் சாரல் தூறியது. விக்கிரமசிங்கபுரம் பகுதியில் சுமார் 2 மணி நேரம் மழை நீடித்தது. வீரவநல்லூரில் மேக மூட்டமாக காணப்பட்டது. மழை இல்லை. சேரன்மாதேவி, களக்காடு, பணகுடி, வள்ளியூர், பணகுடி, காவல்கிணறு பகுதிகளில் சிறிது நேரமும், நாங்குநேரியில் அரை மணிநேரத்துக்கு மேலாகவும் பலத்த மழை பெய்தது. சிவகிரி, மானூர், இட்டமொழி, ராதாபுரம், திசையன்விளை பகுதிகளில் வானம் மேகமூட்டமாக காட்சி அளித்தது. ஆனால் மழை இல்லை.

தி இந்து

தமிழால் இணைவோம்

இன்றைய வேளாண் செய்திகள்

**<u>கால்நடைகளின் இனப்பெருக்கத்துக்கு தனுவாசு தாது உப்புக் கலவை</u>**



கறவைமாடு வளர்ப்புத் தொழிலில் நவீன தொழில் நுட்பங்கள் மூலம் அதிக வருமானத்தை பெருக்கவேண்டும் என்ற நோக்கில் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில், பெரும்பாலான கறவையினங்கள் உரிய தருணத்தில் பருவத்திற்கு வருவதில்லை, சினை பிடிப்புத்திறன் குறைவாக உள்ளதாகவும், ஒரு மாட்டிலிருந்து கிடைக்கும் பாலின் அளவும் குறைவாக கிடைக்கின்றது எனவும் கண்டறியப்பட்டது. இதன் அடிப்படையில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் நவீன தொழில்நுட்பங்களில் ஒன்றான தனுவாசு - தாது உப்புக் கலவையின் மூலமாக இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகான முடியும் என்ற நோக்கத்தில் திருநெல்வேலி மாவட்ட கறவைமாடு வளர்ப் போர்களிடையே தனுவாசு தாது உப்புக்கலவையை பிரபலப்படுத்தும் திட்டம் வடிவமைக்கப்பட்டு, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) நிதியுதவியுடன் திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள கால்நடை விரிவாக்கக் கல்வித்துறையில் செயல்படுத் தப்பட்டு வருகிறது.

**தாது உப்புகளின் வகைகள்**

இத்திட்டத்தின் பல்வேறு பயன்கள் குறித்து இக் கல்லூரி உதவி பேராசிரியர் சே.செந்தில்குமார் கூறியது:

தாது உப்புக்களில் மிகுதியாக தேவைப்படுவை மற்றும் குறைந்த அளவு தேவைப்படுபவை என இருவகை உண்டு. கால்சியம், பாஸ்பரஸ், மெக்னீசியம், சோடியம், பொட்டாசியம், கந்தகம் போன்றவை மிகுதி யாகத் தேவைப்படும் தாது உப்புக்களாகும். இரும்பு, மாங்கனீசு, தாமிரம், துத்தநாகம், அயோடின், கோபால்ட், செலீனியம், மாலிப்டினம் போன்ற தாது உப்புக்கள் குறைந்த அளவே தேவைப்படும் தாது உப்புக் களாகும். தாது உப்புக்கள் தாவரங்கள், பசுந்தீவனப் பயிர்கள், விலங்குகளின் எலும்புத்தூள், ரத்தத்தூள், இறைச்சித்தூள் மற்றும் தாதுப் பொருள் கலவை போன்றவை மூலம் கிடைக்கின்றன.

**தனுவாசு தாது உப்புக் கலவையின் மூலப்பொருள்கள்**

தாது உப்புகள் அளவு (விழுக்காடு) -கால்சியம் 23, பாஸ்பரஸ் 12, மெக்னீசியம் 6.5, இரும்பு 0.5, அயோடின் 0.026, தாமிரம் 0.077, மாங்கனீசு 0.12, கோபால்ட் 0.012, துத்தநாகம் 0.38, ப்ளோரின் 0.07 (அதிக பட்சம்), செலீனியம் 0.3, கந்தகம் 0.5. வளரும் கால்நடைகளுக்குப் போதுமான அளவு கால்சியம், பாஸ்பரஸ் ஆகியவை தீவனத்தில் அளிக்காவிட்டால் எலும்புருக்கிநோய் ஏற்பட்டு எலும்பை பலவீனமாக்கும். சினை மாடுகளில் கன்று உற்பத்திக்கும் பால் உற்பத்திக்கும் இந்த இரு தாதுக்களும் மிகவும் தேவைப்படுகின்றன.

கறவை மாடுகளில் கன்று ஈன்ற 72 மணி நேரத்திலிருந்து 15 நாட்களுக்குள் பால்சுரம் என்ற நோய் ஏற்பட்டு பால் உற்பத்தி மிகவும் பாதிக்கப்படும். இதற்குக் காரணம் கால்சியம் பற்றாக்குறை ஆகும். ஏனெனில் அதிக பால் சுரக்கும் பசுக்களில் ரத்தத்தில் உள்ள கால்சியம் மற்றும் பாஸ்பரஸ், தாது உப்புக்கள் மூலம் தொடர்ந்து வெளியேறு கின்றன. அதாவது ஒரு கிலோ பால் உற்பத்தி செய்ய 2.8 கிராம் கால்சியம் மற்றும் 2 கிராம் பாஸ்பரஸ் சத்து தேவைப்படுகிறது.

ஆகவே இச்சத்துக்களை கறவை மாடுகளுக்கு தொடர்ந்து தேவையான அளவு அளிப்பதன் மூலம் அப்பற்றாக்குறையைச் சரிகட்ட முடியும். பாஸ்பரஸ் சத்துப் பற்றாக்குறை ஏற்படும் போது பசுக்களில்

சினையுறுதல் சம்பந்தமாக பிரச்சினைகள் ஏற்படுவதால் பாஸ்பரஸ் சத்து தினசரி தீவனத்தில் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். பயறுவகைத்தீவனத்தில் பயிர்களில் சுண்ணாம்புச் சத்து அதிக அளவிலும் பாஸ்பரஸ் சத்து குறைந்து அளவிலும் உள்ளன. குறிப்பாக நன்கு வளர்ந்த பசுந்தீவனப் பயிர்களில் பாஸ்பரஸ் சத்து குறைவாக இருப்பதால், பாஸ்பரஸ் சத்து போதிய அளவில் கிடைக்கத் தவிடு வகைகளை கால்நடைகளுக்கு அளிக்கலாம்.

**இனவிருத்திக்குத் தாது உப்புக்களின் அவசியம்**

தாமிரம், துத்தநாகம், கோபால்ட், இரும்பு, மாங் கனீசு, அயோடின், மற்றும் செலினியம் போன்ற தாதுக்கள் கால்நடைகளுக்கு மிகக் குறைந்த அளவே தேவைப்படுகின்றன. இந்த குறைந்த அளவு, கூடுதல் தீவனம் மூலம் சரிவர கிடைக்காவிட்டால் கால்நடைகள் பலவகையில் பாதிக்கப்பட்டு பொருளாதார இழப்பு ஏற்படக்கூடும்.

ஆகவே இத்தாதுக்களின் பற்றாக்குறை ஏற்படின், நொதிப் பொருட்களின் செயல்திறன் பாதிக்கப்பட்டு அதனால் மலட்டுத் தன்மை போன்ற பிரச்சனைகள் ஏற்படுகின்றன. இப்பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு அளிப்பதாக தனுவாசு - தாது உப்புக் கலவை விளங்குகிறது.

மேலும் விவரங்களுக்கு 9486258393 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

<u>**நெல் நடவுத் திருவிழா**</u>



பல்வேறு சிறப்புகளைக் கொண்டிருக்கும் நமது பாரம்பரிய நெல் ரகங்களை பாதுகாக்கவும், அந்த நெல் விதைகளை விவசாயிகள் மத்தியில் பரவலாக்கவும் கிரியேட், தணல் போன்ற தன்னார்வ

அமைப்புகள் ஏராளமான களப் பணிகளை செய்து வருகின்றன. குறிப்பாக இந்த அமைப்புகளால் தொடங்கப்பட்டுள்ள பாரம்பரிய நெல் விதை வங்கி மிகவும் சிறப்புக்குரியது. 60 நாட்கள் முதல் 180 நாட்கள் உடைய அரிய பாரம்பரிய 150-க்கும் மேற்பட்ட நெல் ரகங்கள் இந்த அமைப்புகளால் மீட்டெடுக்கப்பட்டுள்ளன. ஆண்டு தோறும் திருத்துறைப் பூண்டி அருகேயுள்ள ஆதிரெங்கம் கிராமத்தில் கிரியேட் அமைப்பு விதைத் திருவிழாக்கள் நடத்தி, இந்த விதை ரகங்களை ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. பாரம்பரிய நெல் ரகங்கள் இயற்கையாகவே வறட்சி, வெள்ளம் போன்றவற்றை தாங்கி வளரக் கூடியதாகவும், பூச்சி தாக்குதல், நோய் தாக்குதல்களை எதிர்க்கும் திறன்களை உடையதாகவும் உள்ளன. குறைவான உரத் தேவை போன்ற பல்வேறு நல்ல குணங்கள் பாரம்பரிய நெல் ரகங்களுக்கு உண்டு. இவை இயற்கை விவசாயத்துக்கு மிகவும் ஏற்றதாக உள்ளன. பாரம்பரிய நெல் ரகங்களில் மருத்துவ குணங்கள் மிகுந்துள்ளதால் மக்களிடத்தில் இந்த நெல் ரகங்களுக்கான தேவை மிக அதிகமாக உள்ளன. ஆகவே நமது பாரம்பரிய நெல் ரகங்களை சராசரி விவசாயிகளிடையே கொண்டு சேர்த்திடவும், அந்தந்த பகுதிக்கு ஏற்ற சிறந்த நெல் ரகங்களை அந்தந்த பகுதி விவசாயிகளே தேர்ந்தெடுத்துகொள்ள வசதி யாகவும் கும்பகோணம் சோழ மண்டல இயற்கை விவசாயிகளின் உற்பத்தியாளர் குழுமம். மற்றும் மருதம் அங்கக வேளாண்மைக் குழு இணைந்து `பாரம்பரிய நெல் நடவுத் திருவிழா' நடத்தி வருகிறது. இந்த நடவுத் திருவிழா மூலம் ஒரே பண்ணையில் பல பாரம்பரிய நெல் ரகங்களை பயிர் செய்யவும், நடவு முதல் அறுவடை வரை அந்தப் பயிரின் வளர்ச்சியை சுற்றுவட்டாரப் பகுதி விவசாயிகள் நேரில் கண்டறியவும், அதன் மூலம் பாரம்பரிய நெல் ரகங்கள் சாகுபடி பற்றி நேரிடையாக விவசாயிகள் கற்றறியும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் விவரங்களுக்கு 94428 71049 மற்றும் 94427 24537 ஆகிய செல்போன் எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

<u>விவசாய சந்தேகங்களை விளக்கும் தொடுதிரை மையம்</u>



மதுரை மாவட்டம் கருமாத்தூர் அருள் ஆனந்தர் கல்லூரியில் விவசாயிகளுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் வேளாண் தொடுதிரை மையம் செயல்பட்டு வருகிறது. இந்த தொடுதிரையை செயல்படுத்த தொடங்கியவுடன் கீரைகள், தானியங்கள், பணப்பயிர்கள், பயறு வகைகள், காய்கள், மலர்கள் உள்ளிட்டவற்றின் பெயர்கள் வருகின்றன. பின்னர் அதில் ஏதாவது ஒன்றை தேர்வு செய்தவுடன் அவற்றில் உள்ள வகைகள் குறித்த விவரங்கள் வெளியாகின்றன. எடுத்துக்காட்டாக, கீரையை தேர்வு செய்தால் அதில் சிறுகீரை, பசலைக்கீரை, அகத்திக்கீரை, லெச்சகெட்டான் கீரை, கொத்தமல்லி கீரை, பாலக்கீரை, அகத்திக்கீரை, மணத்தக்காளி கீரை, பருப்புக்கீரை, புதினா, கருவேப்பிலை போன்ற கீரைகளின் வகைகள் உள்ளன. அதில் ஏதாவது ஒரு கீரையை தேர்வு செய்தால் அந்த கீரையை பயிர் செய்ய எவ்வளவு நிலம் தேவைப்படும், அந்த இடத்தில் எவ்வாறு பயிர் செய்வது, நோய்கள் தாக்காமல் பாதுகாக்க என்ன என்னென்ன செய்ய வேண்டும், எவ்வாறு பராமரிப்பது, எத்தனை நாட்களில் அறுவடை செய்வது போன்ற தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதேபோல, தானியங்கள், பயறு வகைகள், காய்கள் உள்ளிட்டவை குறித்தும், அவற்றை பராமரிக்கும் முறைகள் குறித்தும் விளக்கமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து அருப்பே கொள்கை ஆய்வு மையத்தின் ஒருங்கிணைப்பாளர் மைக்கேல்ராஜ் கூறியது: எங்கள்

மையத்தில் 17 அமைப்புகளை சேர்ந்த 650 விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களுக்கு விவசாயத்தில் ஏற்படும் சந்தேகங்களை தெளிவுபடுத்துவதற்காக இந்த மையம் செயல்பட்டு வருகிறது. ஒரு பயிரை பற்றிய தகவல்களை வெளியிடும் முன், அந்த பயிர் பற்றிய விவரங்களை ஆசிரியர்களிடமிருந்து சேகரிப்போம். பின்னர் சரிபார்ப்புக்காக அதை வேளாண் பல்கலைக்கழகத்துக்கு அனுப்புவோம். அதன் பின்னர் அவர்கள் சரிபார்த்து அனுப்பிய விவரங்களை இதில் பதிவு செய்வோம். இதன் மூலம் இந்த தொடுதிரையை பயன்படுத்தி விவசாயிகள் தங்கள் சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொள்வார்கள் என்றார். கல்லூரி முதல்வர் சேவியர் வேதம் கூறியது: விவசாயிகள் பயன்பெறும் வகையில், விவசாயம் குறித்த பொது தகவல்கள், வங்கியில் கடன் பெறும் முறைகள் குறித்து இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நோய் தாக்குதலில் இருந்து பயிர்களை விவசாயிகள் பாதுகாத்து விவசாயத்தை லாபகரமாக செய்வதற்கே இந்த மையம் செயல்பட்டு வருகின்றது என்றார்.

## <u>இயற்கை வழியில் மலர் சாகுபடி: பெரம்பலூர் விவசாயி ஆறுமுகம் சாதனை</u>



இயற்கை வேளாண்மை என்றாலே உணவுப் பயிர்கள்தான் என்ற பிம்பத்தை உடைத்திருக்கிறார் பெரம்பலூர் ஆறுமுகம். அவர் ஈடுபடிருப்பது அங்கக மலர் சாகுபடியில். ரசாயன உரம், பூச்சிக்கொல்லி இவையற்ற இயற்கை வேளாண் மையில் விளைந்த தானியம், காய்

கனிகளுக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு இருப்பது கண்கூடு. ஆனால் மலர் சாகு படிக்கு ஆறுமுகம் இயற்கை வேளாண் மையை நாடியதிலிருந்து வேளாண் ஆர்வலர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது நிறைய உள்ளது. பெரம்பலூரை அடுத்த எளம் பலூரில் மலர்ச்சியோடு சம்பங்கி வயலில் மலர்களை கொய்து கொண்டிருந்தார் ஆறுமுகம், "உடல் ஆரோக்கியத்தோடு தொடர்புடையது என்பதால் இயற்கை வேளாண்மையில் உணவு பயிர்களை சாகுபடி செய்வதில் அர்த்தமுண்டு. ஆனால், மலர் சாகுபடியில் அதுபோன்ற அவசியம் எதுவும் இல்லையே என்று என்னிடம் நிறைய பேர் கேட்கிறார்கள். ஆனால் எனது வெற்றிகரமான அனுபவம் சொல்வதெல்லாம் எந்தவொரு சாகுபடி என்றாலும் அது இயற்கை வழிவந்தால் மட்டுமே உழவனுக்கும் நுகர்வோருக்கும் உண்மையான பலனைத் தர முடியும் என்பதுதான்.

இதே சம்பங்கி மலர் சாகுபடியில் ஈடுபடும் ரசாயனங்களைப் பயன்படுத்தும் ஒரு விவசாயி ரூ1000 செலவழித்தால் ரூ. 1100 மட்டுமே கிடைக்கும். ஆனால், நான் மாதம் 4 கிலோ வெல்லம், சிறுதானிய மாவு தவிர்த்து, உடல் உழைப்பை மட்டுமே மூலதனமாக செலுத்தும் எனக்கு ரூ.500 லாபமாகவே கிடைக்கிறது" என்கிறார் ஆறுமுகம். அவர் மேலும் கூறும்போது, "2 சால் உழவோட்டி, சாம்பல் சத்து, தொழு உரம் ஆகியவற்றை ஏக்கருக்கு 8 யூனிட் அடித்தேன். பின்னர் புழுதி உழவோட்டி, கரை பிடித்ததும் மேட்டுப்பாத்தி அமைத்து அதில் சம்பங்கி கிழங்கு நட்டேன். இணை சாகுபடியாக உளுந்து, பாசிப்பயறு, கொத்துக்கடலை நடலாம். ஏனெனில் சம்பங்கி பூ காண 4 மாதமாகும் என்பதால் அதுவரை 3 மாதங்களுக்கு இந்த ஊடு பயிர்கள் கைகொடுக்கும். இவை இருக்கும்போது உயிர் மூடாக்காவும் பயன்படும்.

உளுந்து செடிகளை பிடுங்கி வயலிலேயே போடுவதன் மூலம் சிதைந்த மூடாக்காகவும் பலன் கொடுக்கும். களையை கட்டுப் படுத்த, மண்ணின் ஈரப்பதத்தை தேக்க, நுண்ணுயிர் பெருக்க, மொத்தத்தில் மண் உயிர்ப்போடு இருக்க இந்த மூடாக்குகள் உதவும். 5 முதல் 12 மாதங்கள்

வரை ஏக்கருக்கு தினசரி ஒன்றிரண்டு கிலோவாக மலர் மகசூல் கிடைக்கும். 18 மாதங்களுக்குப் பிறகு 25 கிலோ வரை மகசூல் உயரும். உள்ளூர் மலர் சந்தையில் சராசரியாக கிலோ சம்பங்கிக்கு ரூ. 40 கிடைக்கிறது. மலர் மாலை வியாபாரம் சுத்தமாக படுத்துக்கொண்டாலும் கூட, வாசனை திரவிய தொழிற் சாலைகளுக்கு அப்படியே அனுப்பி விடலாம் என்பதால் சம்பங்கி மலர் சாகுபடியில் வருமான இழப்புக்கு இடமில்லை. வேர் வழி உணவூட்டமாக சாணம், கோமியம், வெல்லம், சிறுதானிய மாவு உள்ளடக்கிய ஜீவாமிர்த கரைசலை நானே தயாரித்து பாசன நீரில் கலந்து விடுவேன். அதே போல இலைவழி உணவூட்டமாக பஞ்சகவ்யம் தயாரித்து தருகிறேன். இதே சம்பங்கி சாகுபடியை ரசாயன வழியில் மேற்கொள்ளும் சக விவசாயிகளின் நிலத்தையும் கவனித்து வருகிறேன். இயற்கை வேளாண்மை வறட்சிக்கு ஈடுகொடுக்கும் என்பதால் அவர்களை போல தாராள பாசன நெருக்கடியில்லை. பூக்களை மார்க்கெட்டில் விற்ற கையோடு அந்த காசுக்கு உரம் பூச்சிக்கொல்லி வாங்கவே அவர்களுக்கு சரியாக இருக்கும். என்னுடைய வருமானமோ முழுதாக வீடு திரும்பும். உரம் பூச்சிக்கொல்லி பயன்படுத் தாததால் சம்பங்கி தட்டைகளை கால்நடை வளர்ப்போர் நல்ல விலைக்கு வாங்கிக் கொள்கின்றனர்” என்று மலர்ச்சியாக பேசும் ஆறுமுகம், இயற்கை வேளாண் ஆர்வலர் களுடன் இணைந்து ஏராளமான இளம் விவசாய ஆர்வலர்களுக்கு ஆலோசனைகளையும் வழங்கி வருகிறார்.